www.tamilarangam.net

# பேய் அரசாட்சி வரும் பிணம் தின்ன வாருங்கள் !

எங்கே அநீதி நடந்தாலும் அதனை எதிர்த்து நிற்பது ஒவ்வொரு மனிதனதும் அடிப்படைக் கடமையாகும் இதனை நாம் கடந்த காலங்களில் செய்யத் தவறியதனால் எமது சொற்ப உரிமைகளையும் படிப்படியாக இழந்து வாய்மூடிய மௌனிகளாக்கப்பட்டுள்ளோம் ஆம் !

இன்று வரலாற்றில் நினைத்தே பார்க்க முடியாத அநீதிகள் எம் மண்ணில் இழைக்கப்படுகின்றது.

தமிழ் பேசும் முஸ்லிம் மக்களை அவர்களின் சொந்த மண்ணை விட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியேற்றிக் கொண்டிருக்கின்றர்கள்

இந்தப் பிரசுரத்தை யார்? ஏன்?? வெளியிட்டுள்ளார்கள் என்று மண்டையைப் போட்டுக் குழப்பாதீர்கள். நாமென்ன செய்ய முடியும் என நொந்து கொண்டு அன்றாட அலுவலில் மூழ்காமல் தயவு செய்து ஒரேயொரு நிமிடமாவது நில்லுங்கள் !

காத்தான்குடி பள்ளிவாசலில் வைத்து 160 முஸ்லிம் மக்களை கும்பலாக புலிகள் சுட்டுக்கொன்ற கொடூரம் இன்னமும் உறையவில்லை, அதற்குள் வடக்கில் உள்ள முஸ்லிம் மக்கள் அனைவரையும் வெளியேறும் படி புலிகள் உத்தரவிட்டு வெளியேற்றிக் கொண்டிருக்கின்றர்கள் அதுவும் ஆயிரம் ரூபா பெறுமதிக்குட்பட்ட உடமைகளுடன் மட்டுமே வெளியேற அனுமதி வேறு வழங்கியுள்ளார்கள் சொந்த மண்ணை விட்டு துரத்துவது மட்டுமன்றி அவர்களின் சொத்தைக் கூட இவ்வாறு சூறையாடும் "கேவல நியாயம்" நடக்கின்றது.

சில வேளைகளில் இதனை நம்புவதற்கு கூட உங்களுக்கு கஸ்ரமாக இருக்கலாம் ஆனால் உண்மை. அந்தளவிற்கு புலிகளின் கொடூரம் எம் தேசத்தின் மக்களை சிதறி சின்னபின்னப் பட வைக்கின்றது. இதை தாம் செய்யவில்லை என புலிகள் ஒரு புறம் பிரச்சாரம் செய்கின்றர்கள் இன்னொரு புறம் "முஸ்லிம்கள் காட்டிக் கொடுக்கின்றர்கள்" - அதற்கு இதுதான் வழி என்று அவர்கள் பாணியிலேயே பதில் சொல்கின்றர்கள். காட்டிக் கொடுப்பதென்பது தனி நபர் பிரச்சனைகளே ஒழிய ஒரு இனம் சார்ந்த பிரச்சனை அல்ல. ஒரு வாதத்திற்காக எடுத்துக் கொண்டால் தமிழ் மக்கள், அவர்களில் ஒரு சிலர் காட்டிக் கொடுக்கவில்லையா? அப்போதெல்லாம் மின்கம்ப தண்டனைகளுக்குப் பதில் தமிழ் மக்களை கிராமம் கிராமமாக அல்லவா அழித்திருக்க வேண்டும் ஒரு வேளை இனி இதுவும் நடக்கக் கூடுமோ ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை இனவாத அரசின் சகலவிதமான ஒடுக்குமுறைகளையும் வட கிழக்கு முஸ்லிம் மக்களும் தான் அனுபவிக்கின்றார்கள். இதை விட கொடுமையான விதத்தில் இந்திய மதவெறிகொண்ட இராணுவம் முஸ்லிம் மக்கள் மீது தனது கொலை வெறித்தனத்தை கட்டவிழ்த்து விட்டது. மூதூர் முஸ்லிம் கிராமம் ஒன்றை இரவோடு இரவாக சுற்றிவளைத்து முஸ்லிம் மக்களை புலிகள் படுகொலை செய்த போது கூட இந்திய இராணுவம் கண்டும் காணாமல் விடவில்லையா?

1989 இல் சம்மாந்துறை கலவரத்தின் போதும் T.N.A-க்கு இந்திய இராணுவம் உதவி புரியவில்லையா?

1985 இல் ஏறாவூர் காத்தான்குடி பிரதேசத்தில் தமிழ் முஸ்லிம் கலவரத்தை உருவாக்கி கொலை வெறியாட்டமாடின எமது இயக்கங்கள். புலிகள் உட்பட E.P.R.L.F, TELO, ENDLF எல்லாமே ஆட்கடத்தல், கொலை என வியர்க்க விறுவிறுக்க செயற்பட்டனர்.

1986 இல் மன்னார் பள்ளிவாசலில் வைத்து சில முஸ்லிம்களை EROS சுட்டுக் கொன்றுவிட்டு அப்பாவிகளாகத் திரிந்தனர். இவ்வாறு முஸ்லிம் மக்களுக்கு எதிராக இயக்கங்கள் தங்களின் கோரப் பல் முகங்களை அவ்வப் போது அடையாளங் காட்டத் தவறவில்லை.

இலங்கை அரசோ தமிழ் முஸ்லிம் மக்களை கூறுபடுத்தி வடக்கு கிழக்கை துண்டாட நயவஞ்சகமாக செயற்படுகின்றது. கலவரங்களைத் தூண்டி விடுகின்றது. இதனை தடுப்பதற்குப் பதில் புலிகள் இதில் ஈடுபட்டதுடன் இன்னும் மேலே போய் இன்று அந்த அரசிடமே முஸ்லிம் மக்களை சரணடைய வைக்கின்றனர். இதையெல்லாம் அரசு செய்துவிட்டு புலிகளைச் சாட்டுகிறது என்று சுலபமாக காரணம் சொல்லிவிட முன் தயவு செய்து ஒரு கணம் நின்று யோசியுங்கள். இப்படித் தாம் தாம் தப்பிக் கொள்ள புலிகள் அரசிலும் அரசு புலிகள் மீதும் பழி போடும் போது புலிக்கு எதிரானவர்கள் அரசின் பக்கமும் மற்றவர்கள் புலிகளின் பக்கமும் நின்று வரிந்து கட்டிக் கொள்ளாமல் உண்மைகளை கண்டு பிடிக்க முயல்வோம். கடந்த காலங்களில் இயக்கங்களுக்கிடையே நிகழ்ந்த மோதல்கள், இடுபறிகள், உயிர்ப் பறிப்புக்களுக்கு கூட அந்தந்த இயக்க ஆதரவாளர்கள் நிலைகள் நின்று கொண்டு உண்மையை காண மறுத்தோம். இன்று அதன் பயனை அறுவடை செய்கிறோம்.

இனியாவது நாம் திருந்த வேண்டாமா?

அரசு தான் முஸ்லிம் மக்களை வெளியேற்றுகின்றது என்றால்

1. "யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள்" என்பது வெறும் வாய் வெட்டா?

2. பரம்பரையாக தாம் வாழ்ந்த பிரதேசத்தில் இருந்து ஒரு இனமே வெளியேற்றப் படும் போது "பாரம்பரிய பிரதேசத்திற்காக" புலிகள் போராடுகின்றோம் என்பது வெறும் சுத்துமாத்தன்றி வேறென்ன.

"முஸ்லிம் மக்கள் தாங்களாகவே வெளியேறுகின்றார்கள் நாமெப்படி பலவந்தமாக தடுக்க முடியும்" என்று ஒரு வேளை சொல்லலாம். அப்படி ஒரு இனம் தன் சொந்த மண்ணை கைகழுவிவிட்டு போகுமா என்பது ஒருபுறம் இருக்கட்டும். அப்படி வெளியேறுபவர்களை தடுப்பது எனபதே "பலவந்தமான" முறையில் தான் என்று அவர்கள் தெரிந்து வைத்திருப்பதும் கூட ஒரு புறம் இருக்கட்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதென்ன ஜனநாயகமோ ??

1) "ஜன நாயக நீரோட்டம்" ஓட விட்ட வேளை கூட நூற்றுக் கணக்கான இளைஞர்களை கடத்தி படுகொலை செய்தது எந்தவகை ஜனநாயகம் ?

2) மாற்று இயக்கங்களை போராட அனுமதிக்காமல் அழித்தொழித்தது எந்தவகை ஜனநாயகம் ?

3) EROS இனை செரித்துப் போட்டது எந்தவகை ஜனநாயகம் ?

4) உரிமைக்காக போராடிய மாணவர்களை கடத்தியது கொலை செய்தது வளாகத்துக்குள் வைத்து தாக்கியது எல்லாம் எந்தவகை ஜனநாயகம் ?

5). EPRLF, PLOT, TELO, ENDLF அமைப்புக்களில் இருந்தார்கள் என்ற காரணத்தால் அவர்களின் குடும்பங்களை அழித்தது நாட்டை விட்டு துரத்தியது எந்தவகை ஜனநாயகம்?

6) இயக்கங்களை விமர்சித்ததற்காக ராஜினி உட்பட நல்ல சக்திகளை கொன்று தீர்த்தது எந்தவகை ஜனநாயகம் ?

7) சனத்திடமிருந்து பலவந்தமாக பவுண் காசை பறித்தெடுப்பது எந்த வகை ஜனநாயகம் ?

8) மிக அடிப்படை உரிமையான பேச்சு சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் யாவற்றையும் இல்லாமல் அழித்தது எந்தவகை ஜனநாயகம்?

9) காசு தராவிட்டால் 'கவனிக்கிறோம்' என்று வெளிநாட்டில் '**இரவல், மிரட்டல்**' செய்ய வெளிநாட்டு கிளைகளை அனுமதித்தது எந்த வகை ஜனநாயகம் ?

ஜனநாயகமுமில்லை ஒரு மண்ணுமில்லை அங்கே !

எமது நாட்டை ஒரு முறை நினைத்துப் பாருங்கள் மக்கள் வாய் மூடியுள்ளார்கள். ஆகாயத் தாக்குதல்-களுக்கு பதுங்கு குழிக்குள் இறங்குகிறார்கள். இளம் பிஞ்சுகள் பல கைத் தாங்கலாக துப்பாக்கிகளை சுமந்த-படி மண் மூட்டைகளின் பின்னே காவல் நிற்கின்றனர். ஆனால் இந்தப் பிஞ்சுகளின் பின்புறமாக புதைகுழி தோண்டப் பட்டுக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தின் முன்னே சென்றால் ஆழி முடிவே தெரியாத புதைகுழி. பின்னே திரும்பிப் பார்த்தால் மக்கள் திசை தெறிக்க ஓடுகின்றனர். வெடிச்சத்தம் ஓய்ந்ததும் புலிகளிடம் கப்பம் பவுண் காசு என கட்டிவிட்டு ஆளை விட்டால் போதுமென திரள் திரளாக சனம் அகதிகளாக வெளியேறிக் கொண்டு இருக்கின்றார்கள்.

செல் அடியிலும் குண்டுத் தாக்குதலிலும் மக்கள் ஒரு புறம் அகதிகளாக ஓட மறுபுறம் முஸ்லிம் மக்கள் புலிகளின் துப்பாக்கி முனைகளினால் வெளியேற்றப் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதன் எதிர் கால பாதிப்பு நினைத்துப் பார்க்க கூடிய அளவு இலேசானதா ?

நண்பர்களே !

நாம் ஒரு இருண்ட எதிர் காலத்தை நோக்கி துரத்தப்படுகின்றோம். ஒரு காட்டு மிராண்டி சமூகம் எம் தேசத்தில் உருவாக்கப் படப் போகின்றது. இதற்கு உங்கள் 'பணம்' பயன் படப் போகின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இதெல்லாம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதென்ன ஜனநாயகமோ ??

1) "ஜனநாயக நீரோட்டம்" ஓட விட்ட வேளை கூட நூற்றுக் கணக்கான இளைஞர்களை கடத்தி படுகொலை செய்தது எந்தவகை ஜனநாயகம்?

2) மாற்று இயக்கங்களை போராட அனுமதிக்காமல் அழித்தொழித்தது எந்தவகை ஜனநாயகம்?

3) EROS இனை செரித்துப் போட்டது எந்தவகை ஜனநாயகம்?

4) உரிமைக்காக போராடிய மாணவர்களை கடத்தியது கொலை செய்தது வளாகத்துக்குள் வைத்து தாக்கியது எல்லாம் எந்தவகை ஜனநாயகம்?

5). EPRLF, PLOT, TELO, ENDLF அமைப்புக்களில் இருந்தார்கள் என்ற காரணத்தால் அவர்களின் குடும்பங்களை அழித்தது நாட்டை விட்டு துரத்தியது எந்தவகை ஜனநாயகம்?

6) இயக்கங்களை விமர்சித்ததற்காக ராஜினி உட்பட நல்ல சக்திகளை கொன்று தீர்த்தது எந்தவகை ஜனநாயகம்?

7) சனத்திட மிருந்து பலவந்தமாக பவுண் காசை பறித்தெடுப்பது எந்த வகை ஜனநாயகம்?

8) மிக அடிப்படை உரிமையான பேச்சு சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் யாவற்றையும் இல்லாமல் ஒழித்தது எந்தவகை ஜனநாயகம்?

9) காசு தராவிட்டால் 'கவனிக்கிறோம்' என்று வெளிநாட்டில் 'இரவல் மிரட்டல்' செய்ய வெளிநாட்டு கிளைகளை அனுமதித்தது எந்த வகை ஜனநாயகம்?

ஜனநாயகமுமில்லை ஒரு மண்ணுமில்லை.

அங்கே!

எமது நாட்டை ஒரு முறை நினைத்துப் பாருங்கள். மக்கள் வாய் மூடியுள்ளார்கள். ஆகாயத் தாக்குதல் - கழுத்து பதுங்கு குழிக்குள் இறங்குகிறார்கள். இளம் பிஞ்சுகள் பல கைத்தாங்கலாக துப்பாக்கிகளை சுமந்த - படி மண் மூட்டைகளின் பின்னே காவல் நிற்கின்றனர். இந்தப் பிஞ்சுகளின் பின்புறமாக புதைகுழி தோண்டப் பட்டுக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தின் முன்னே சென்றால் ஆழி முடிவே தெரியாத புதைகுழி. பின்னே திரும்பிப் பார்த்தால் மக்கள் திசை தெரியாது ஓடுகின்றனர். வெடிச்சத்தம் ஓய்ந்ததும் புலிகளிடம் கப்பம் கட்டிவிட்டு பவுண் காசு என ஆளை விட்டால் போதுமென திரள் திரளாக சனம் அகதிகளாக வெளியேறிக் கொண்டு இருக்கின்றார்கள்.

செல் அடியிலும் குண்டுத் தாக்குதலிலும் மக்கள் ஒரு புறம் ஓட மறுபுறம் முஸ்லிம் மக்கள் புலிகளின் துப்பாக்கி முனைகளினால் வெளியேற்றப் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அகதிகளாக இதன் எதிர் கால பாதிப்பு நினைத்துப் பார்க்க கூடிய அளவு இலேசானதா?

நண்பர்களே!

நாம் ஒரு இருண்ட எதிர் காலத்தை நோக்கி துரத்தப்படுகின்றோம். ஒரு காட்டு மிராண்டி சமூகம் எம் தேசத்தில் உருவாக்கப் படப் போகின்றது. இதற்கு உங்கள் 'பணம்' பயன் படப் போகின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இதெல்லாம்

www.tamilarangam.net

தெரிகிறது - ஆனாலும் அவர்கள் எங்களை "கவனிக்-கிறோம்" என்கிறார்களே என்று நீங்கள் சிந்திக்கலாம். ஆனால் நூலிழையில் தொங்கும் எமது இந்தச் சிறிய சுயநலம் எமது தலைக்கு மேலேயே கூரிய ஈட்டியாக தொங்குகின்றது. 'இன்று நாம் இந்தச் சுயநலத்தை இழந்து நிற்க தயாராக இல்லை எனில்,

"பேய் அரசாட்சி வரும்
பிணம் தின்ன வாருங்கள்"

- இலங்கை மக்களின் அடிப்படை
மனித உரிமைகளுக்கான அமைப்பு
(லண்டன்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்